[திரு கூத்தக்குடி ச. சண்முகம்]

கள் அறிவித்த சலுகை பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே, சலுகை 25 சதமானத்திற்குக் கீழ் விளைச்சல் உள்ளவர்களுக்கா அல்லது அனுவாரி விளைச்சல் 37 பைசாவுக்குக் குறைவாக இருப்பவர்களுக்கா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நேற்றைக்கு நிதிநிலை அறிக்கையின்போது நான் அளித்த பதிலில் இந்தச் சபைக்குத் தெரிவித்த சலுகைதான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய சலுகை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம் குறித்து.

திரு. க. சுப்பு : நிகழ்ச்சி நிரல் பற்றி வாசித்தீர்கள். ஏற்கனவே, இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அது இடம் பெறவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அதுபற்றி அரசு ஆய்வு செய்து எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து முடிவு செய்து 5—4—78 அன்று விவாதிக்கப்பட இருக்கிறது. அதற்கான அறிவிப்பு பின்னால் அறிவிக்கப்பட இருக்கும் நிகழ்ச்சி நிரலில் வரும்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

அமைச்சரின் அறிக்கை.

6. மின் உற்பத்தி மீது விதித்துள்ள ஆயத் தீர்வையை மறுபரிசீலனை செய்து திரும்பப் பெறக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் இந்திய பிரதமருக்கு, அனுப்பிய தந்தி குறித்து பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே மத்திய அரசு வரவு செலவுத் திட்டத்தில் மின் உற்பத்தி மீது யூனிட் ஒன்றுக்கு 2-பைசா வீதம் ஆயத்தீர்வை விதித்துள்ளதை இந்த அவை அறியும். இது மின்வாரியத்தின் தற்போதைய நிதி நிலை பற்றுக்குறையை மேலும் அதிகமாக்குவதுடன் மாநில அரசின் நிதிநிலை பற்றுக்குறையை மறைமுகமாகவும் அதிகரிக்க வகை செய்கிறது, மாநிலத்திற்கு கிடைக்கக்கூடிய வருவாய், மத்திய அரசு நிதிக்கு மாற்றப்படுமாதலால், இது மத்திய மாநில அரசிற்கிடையேயுள்ள சுமுகமான நிதிப் பங்கீடு உறவுக்கு உகந்தது அல்ல. இந்நிலையில் முதலமைச்சர் பிரதமருக்கு தந்தி மூலம் கீழ்க்கண்ட எதிர்ப்பு தெரிவித்துள்ளார்;